செ.வெ.எண். 63 நாள்: 28.11.2020

**தமிழ்நாடு பொது நூலக துறையில் சிறப்பாக பணியாற்றிய நூலகர்களுக்கு விருதுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானு ரெட்டி இ.ஆ.ப. அவர்கள் ( 28.11.2020) வழங்கினார்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று ( 28.11.2020) தமிழ்நாடு அரசு பொது நுலகத்துறையில் சிறப்பாக பணியாற்றும் நூலகர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானு ரெட்டி இ.ஆ.ப. அவர்கள் கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறையில் ஆண்டுதோறும் சிறப்பாகப் பணியாற்றும் நூலகர்களுக்கு மாவட்ட வாரியாக "டாக்டர்.எஸ்.ஆர்.அரங்நாதன் விருது" வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது வழங்கும் போது விருதிற்கான நற்சான்றிதழ், 50 கிராம் வெள்ளிப்பதக்கம் மற்றும் ரூ.5000 / ரூபாய் ரொக்க பரிசும் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு (2020) கிருஷ்ணகிரி மாவட்ட நூலக ஆணைக்குழுவில் செயல்படும் ஓசூர் கிளை நூலக வாசகர் வட்டம் டாக்டர். எஸ்.ஆர்.அரஙகநாதன் விருதுக்கு தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்பட்டுள்ளதையடுத்து ஓசூர் வாசகர் வட்ட தலைவர் திரு. ஆர்.ஜெகநாதன் அவர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டு கேடயம் வழங்கினார்.

இதனைப்போன்ற நூலக இயக்கம் வளர முனைப்புடன் பணியாற்றிய சிறந்த வாசகர் வட்டத் தலைவருக்கு "நூலக ஆர்வலர் விருது" ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு (2020) அஞ்செட்டி கிளை நூலகத்தில் பணிபுரியும் மூன்றாம் நிலை நூலகர் திரு.சி.பழனி அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் ரொக்க பரிசுக்கான காசோலை மற்றும் வெள்ளி பதகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானு ரெட்டி இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட நூலக அலுவலர் திருமதி. மா.தனலட்சுமி ஓசூர் கிளை நூலகர் திருமதி.ரேணுகாசக்தி வேல் மற்றும் வாசகர் வட்ட நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு மக்கள் தொடர்பு அலுவலகம்
கிருஷ்ணகிரி.